# பஞ்சீகரணம்



ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | பஞ்சீகரணம் |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞன் (Prajnan) |
| **மொழி** | : | தமிழ் |
| **வகை** | : | பிரபஞ்ச உற்பத்தி |
| **முதற்பதிப்பு** | : | 2019 |
| **நூலின் அளவு** | : | டெம்மி |
| **பக்கங்கள்** | : | 40 |
| **தாள்** | : | A5 (5.83" X 8.27") |
| **எழுத்து அளவு** | : | 12 புள்ளிகள் |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |
| **விலை** | : | அகவிழிப்பு |

# பஞ்சீகரணம்

ப்ரக்ஞன்

# பஞ்சீகரணம்

பஞ்சீகரணம் (Panchikarana) எனில் ஐந்தின் சேர்க்கை என்று பொருள். பிரபஞ்சம் மற்றும் சீவராசிகள், சூக்கும நிலையில் உள்ள ஆகாயம் முதலிய பஞ்சபூதங்கள், குறிப்பிட்ட விகிதத்தில் கலந்து உருவாகும் பருப்பொருளின் (ஸ்தூலம்) (Matter) தோற்றத்திற்கு **“பஞ்சீகரணம்”** என்று சாங்கிய தத்துவம் சொல்வதை வேதாந்த சாஸ்திரங்களும் ஏற்றுக் கொள்கிறது.


படைப்பின் தொடக்கத்தில் தோன்றிய சூக்கும பூதங்கள் (ஐந்து சூக்கும பூதங்கள்) ஒன்றுடன் ஒன்று சேர்க்கை நடைப் பெறாமல் இருந்ததால், செயல்பாடுகள் நிறைந்த உலகிற்குத் தகுந்த ஸ்தூலப்பொருட்கள் (பருப் பொருட்கள்) (ஸ்தூலப் பொருள்கள்) தோற்றுவிக்கும் திறமையற்று விளங்கியது.

பஞ்சீகரணத்தால் சூக்கும பூதங்கள், ஸ்தூல வடிவ பஞ்ச பூதங்களாக வெளிப்படும் தன்மையைப் பெற்று செயலாற்றும் தகுதியைப் பெறுகின்றன.

கண்களுக்குத் தெரியாத சூக்கும நிலையில் உள்ள பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் முதன்முதலில் இரு சமமான பகுதிகளாகப் பிரிக்கப் படுகின்றன.

இவ்விதமாக பிரிக்கப்பட்ட பத்து பகுதிகளில் முதல் ஐந்து பகுதிகள் ஒவ்வொன்றும் நான்கு சமமான பகுதிகளாக பிரிக்கப்படுகின்றது.

இதன் பிறகு, ஒவ்வொரு பூதத்தின் மூலப் பொருளின் ஒரு பகுதி மற்ற நான்கு மூலப் பொருட்களின் நான்கு பகுதிகளுடன் சேர்க்கப்படுகிறது.




இதனை கீழ்கண்டவாறு பகுத்து ஆராயப்படுகின்றது. அதாவது, எல்லாம் பாதி பாதியாகப் பிரிந்தது.

50% – 50%

இதில ஒரு பாதி நான்காகப் பிரிந்தது. ஒவ்வொன்றும் 12.5%. 12.5% X 4 = 50% என, ஒவ்வொரு பூதமும்

தன்னுடைய 50% + மற்ற நான்கிலே ஒவ்வொன்றிலிருந்தும் 12.5% சேர்த்துக்கொண்டு ஸ்தூல பூதமாக மாறியது.

| சூக்ஷும ஆகாயம் | சூக்ஷும காற்று | சூக்ஷும நெருப்பு | சூக்ஷும நீர் | சூக்ஷும நிலம் | ஸ்தூல பூதங்கள் |
|---|---|---|---|---|---|
| 50% | 12.5% | 12.5% | 12.5% | 12.5% | ஆகாயம் |
| 12.5% | 50% | 12.5% | 12.5% | 12.5% | காற்று |
| 12.5% | 12.5% | 50% | 12.5% | 12.5% | நெருப்பு |
| 12.5% | 12.5% | 12.5% | 50% | 12.5% | நீர் |
| 12.5% | 12.5% | 12.5% | 12.5% | 50% | நிலம் |

இதில், எது 50% இருக்கின்றதோ, அந்த பூதத்தின் பெயர் வரும்.

எடுத்துக்காட்டு பூமி. (பகுதி) செயல்படா சூக்கும பஞ்ச பூதங்களின் கலவையினால் எவ்வாறு செயல்படும் ஸ்தூல பூமி உருவாகின்றது எனில் = ½ பங்கு சூக்கும பூமி + 1/8 பங்கு நீர் + 1/8 பங்கு நெருப்பு + 1/8 பங்கு காற்று + 1/8 பங்கு ஆகாயம் – இந்த விகிதத்தில் பஞ்ச சூக்கும பூதங்களின் கலவையினால் (பஞ்சீகரணத்தினால்) செயல்படும் இந்த ஸ்தூல பூமி உருவாகின்றது.

இதுப்போன்ற, கலவையால் (பஞ்சீகரணத்தால்) மற்ற ஸ்தூலமான பஞ்ச பூதங்களான காற்று, நெருப்பு, நீர் ஆகிய ஸ்தூல பூதங்கள் உருவாகிறது.



சிருஷ்டிக்கு முன்பு இந்த பிரபஞ்சம் பெயர்கள் ஏதுமில்லாத தனித்த பரப்பிரம்ம ஸ்வரூபமாக வெட்ட வெளியாகவே இருந்தது. சுத்தமான நிர்குண (குணங்கள் ஏதுமில்லாத), நிராகார, நிர்விகார பரப்பிரம்மத்தில் மூலப் பிரக்ருதியென்னும் மாயை உண்டாயிற்று.


இது எப்படி என்றால், சாலைகளில் வாகனங்களில் செல்லும் போது சாலையில் நீர் வழிந்து ஓடிக்கொண்டிருக்கும் ஒரு தோற்றம் வெகு தூரத்தில் காணப்படும்.

அதுவே அந்த நீருக்கு மிக அருகில் சென்று பார்த்தால் அது ஒன்றுமே இல்லாத "கானல் நீர்" என்பது தெரியவரும்.

அதுப்போல, இந்த பிரபஞ்சம் பார்வைக்கு இருப்பது போல தோன்றுகின்றது, ஆனால், உண்மையில் அது இல்லை.

இதைத்தான் “**மாயை**” என்று சாஸ்திரம் கூறுகின்றது.

இதுபோல உண்மையற்ற மூலப்பிரக்ருதி என்ற மாயை முதன் முதலில் பரப்பிரம்மத்திடம் இருந்து தோன்றியது.



அந்த மூலப்பிரக்ருதியிடமிருந்து *வெண்மை, சிவப்பு* மற்றும் *கறுப்பு* என்ற மூன்று வர்ணங்களுடன் கூடிய மூன்று சக்திகள் உருவாயிற்று.

இதில் வெண்மை நிறமே **மாயா சக்தி**, சிவப்பு நிறமே **அவித்தியா சக்தி**, மற்றும் கறுப்பு நிறமே **ஆவரண, விக்ஷேப** சக்திகள் எனப்படும்.

இந்த மாயா சக்தி சத்துவ குணம் பிரதானமாகக் கொண்டுள்ளதால், அதில் உண்டாகிய பிரதி பிம்பமே "ஈஸ்வரன்" என்று சொல்லப்படுகின்றது.

அந்த ஈஸ்வரனே ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழிலை செய்யக்கூடிய பிரமன், விஷ்ணு மற்றும் மஹேஸ்வரன் என்ற மூவரும் ஆவார்கள்.

அதுப்போல, உண்மையில் ஈஸ்வரன் இந்த முத்தொழி லைச் செய்வதுப்போல தோன்றினாலும், அந்த பிரம்மம் இன்றி எதுவும் இல்லை.

மேலும், பிரம்மத்திலிருந்து முதலில் தோன்றிய மாயையிலிருந்து அவித்தையும் (அஞ்ஞானம்), அவித்தை யிலிருந்து அஹங்காரம் என்னும் ஆவரணம், விக்ஷேபம், என்ற இரு சக்திகளும், அதிலிருந்து சப்த (ஒலி), ஸ்பரிச (உணர்சி), ரூப (தோற்றம்), ரச (நீர்), கந்த (மணம்) எனும் ஐந்து "தன்மாத்திரைகள்" உண்டாகின.

பஞ்ச பூதங்களின் ஆதார குணங்களாகிய இந்த தன்மாத்திரைகள், தனித்தனியே, சுத்தமான, கலப்பற்ற தெளிந்த நிலையிலும் விளங்குகின்றன. ஒன்றோடு ஒன்று கலந்துபட்ட நிலையிலும் விளங்குகின்றன.

அந்தக் கலப்பு ஒரு ரிதத்துடன் நிகழ்கின்றது. 'ரிதம்' என்றால் இயற்கை ஒழுங்கு.

நான்கு பங்கு ஆகாசத்தில், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நீர், ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

நான்கு பங்கு காற்றில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு நெருப்பு, ஒரு பங்கு நீர் மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

நான்கு பங்கு நெருப்பில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நீர் மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

நான்கு பங்கு நீரில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

நான்கு பங்கு நிலத்தில், ஒரு பங்கு ஆகாசம், ஒருபங்கு காற்று, ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நீர் ஆகியனவே சேர்கின்றன.

இவ்வாறு எந்த ஒரு பூதத்தின் நான்கு நிரைகளுடன், மற்ற நான்கு பூதங்களின் ஓரோர் நிரைகள் சேர்வதை **"பஞ்சீகரணம்"** அல்லது **'பஞ்சீகிருதம்'** என்று அழைக்கப் படுகின்றது.

பஞ்சீகரணம் என்றால் ஐந்து பொருட்களின் சேர்க்கை என்பதை நினைவில் கொள்வோம்.

சுத்தமான நிலையில் உள்ள பூதங்கள் நுண்ணிய, புலப்படாத சூக்ஷும நிலையில் விளங்குகின்றன.

பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதங்கள் புலன்களால் அறியப்படும் வண்ணம் பருவாக, அதாவது, ஸ்தூலமாக விளங்குகின்றன.

இதைப்புரிந்து கொள்ள ப்ருத்வி ஆகிய நிலம் என்னும் பூதத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

நிலம் பல்வேறு தாதுக்களால் ஆனது. அதை நாம் தொட்டுணர முடிகின்றது. அதன் மணத்தை முகர முடிகின்றது. அதன் உருவத்தை, நிறத்தைக் காண முடிகின்றது. அதன் சுவையை ருசிக்க முடிகின்றது. அது கடத்தும் சப்தத்தை கேட்கவும் முடிகின்றது. இது அந்த பூதத்தின் ஸ்தூல நிலை.

ஸ்தூலமாக நாம் அறியும் நிலத்துக்கு இருக்கும் நுண்ணிய இயல்புகள் அதன் சூக்ஷ்ம நிலை. கேட்கும் போது சப்தமாக, தொடும் போது ஸ்பரிசமாக, காணும் போது ரூபமாக, ருசிக்கும் போது ரஸமாக, முகரும் போது கந்தமாக விளையும் அதன் பண்புகள் அதன் சூக்ஷ்ம நிலை.

இந்தப் பண்புகள், பகுத்துப் பார்க்க முடியாத, பிரித்து உணரமுடியாத நுண்ணிய குணங்கள். பஞ்சீகரணம் செய்யப்படாத சுத்தமான நிலையில் இருக்கும் ப்ருத்வி ஆகிய பூதத்தால் ஆனது இந்த சூக்ஷ்ம நிலை.

பஞ்சீகரணத்தால் கலந்துபட்ட நிலையில் உள்ள ப்ருத்வி ஆகிய பூதத்தால் ஆனதே நாம் உணரும் நிலம்.

நிலத்தின் பௌதீக நிலையே ஸ்தூல நிலை. நிலத்தின் இயல்புகளின் ஆதார குணத்தொகுப்பே அதன் சூக்ஷ்ம நிலை.

தெளிந்த, கலப்பற்ற, சுத்தமான நிலையில் குணங்களுக்கு ஒரு இருப்பு இருக்கின்றது. அதை சூக்ஷும நிலை என்று அழைக்கிறோம்.

அந்த குணங்கள் பஞ்சீகரணப்பட்டதும், அவை பௌதீகமாக பருநிலை அடைந்து, ஸ்தூல பூதங்களாக வடிவெடுக்கின்றன.

அந்த ஸ்தூல பூதங்களால் ஆனவையே நாம் பிரபஞ்சமெங்கும் காணும் யாவும். பஞ்ச பூதங்களின் இந்த தத்துவங்கள் உருவான விதம் பற்றி வேதாந்த நூல்கள் என்ன கூறுகின்றன?

நிலத்தை விடநீர் நுண்ணியது, நீரை விட நெருப்பும், நெருப்பை விட காற்றும், காற்றை விட ஆகாசமும் நுண்ணியன.

நுண்ணிய தத்துவங்களினின்றே, அவற்றினும் பருவான தத்துவங்கள் உருவாகின்றன.

(வெட்டவெளியிலிருந்து ஆகாசம் உண்டாயிற்று).

ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் உண்டாகின.

அதனிடமிருந்து ஆகாசம் தோன்றியது என்று பொருள். **'அது'** என்று **'மாயை'** யைக் குறிப்பிட்டார் ஆதிசங்கரர். அதனிடமிருந்து **சப்த தன்மாத்திரைகள்** தோன்றியது.

சப்த தன்மாத்திரையிலிருந்து ஆகாச தத்துவமும், **ஸ்பரிச** தன்மாத்திரையும் தோன்றின.

ஸ்பரிச தன்மாத்திரையிலிருந்து வாயு தத்துவமும், **ரூப** தன்மாத்திரையும் தோன்றின.

ரூப தன்மாத்திரையிலிருந்து அக்னி தத்துவமும் **ரஸ** தன்மாத்திரையும் தோன்றின.

ரஸ தன்மாத்திரையிலிருந்து ஜல தத்துவமும் **கந்த** தன்மாத்திரையும் தோன்றின.

கந்த தன்மாத்திரையிலிருந்து ப்ருத்வி தத்துவம் தோன்றியது. இதுவே தோற்றத்தின் வரிசைக் கிரமம்.

இந்த ஐந்து பூதங்களாலேயே பிரபஞ்சமும், உலகமும், **'நாம்'** உட்பட எல்லா வஸ்துக்களும் உருவாகின என்பது வேதாந்தத்தின் பார்வை.

நாம் அறிந்த எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும், அவற்றை, இந்த பஞ்சபூதங்களின் தொகுப்பாகவே வகைப் படுத்த முடியும்.

நாமும் இந்த பஞ்ச பூதங்களின் சேர்க்கையா?

பஞ்ச பூதங்களின் நுண்ணிய குணங்களாகிய **தன்மாத்திரைகள்,** பஞ்சீகரணம் ஆன நிலையில், பருவான, ஸ்தூல நிலையில் விளங்குகின்றன.

அவைகள், நம் உடலுக்கும் ஆதாரமாக, அடிப்படையாக, மூலப்பொருட்களாக ஆகின்றன.

பஞ்ச பூதங்கள், ஸ்தூலமாக நிலையடைந்து, நம் உடலுக்கு, ஸ்தூல தேகத்திற்கு ஆதாரமாகின்றன என்பது விளக்கம்.

அதாவது, நம் உடல், பஞ்சீகரணம் செய்யப்பட்ட பஞ்ச பூதங்களால் ஆனதே.

நமக்கு, நாம் காணும் இந்த பௌதீக உடல் மட்டுமன்றி, இதனோடு இயைந்து கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்ணிய உடலும் இருக்கின்றது.

அந்த நுண்ணிய அல்லது சூக்ஷமமான உடல், பஞ்சீகரணம் செய்யப்படாத நிலையில் உள்ள பஞ்சபூதங்களால் ஆனது என்றும் கூறுகின்றது விவேக சூடாமணி.

நம் உடலில் பஞ்ச பூதங்களின் இருப்பு எங்கு உள்ளது?

நம் உடல் ஆக்ரமித்துள்ள இடம் '**வெளி**' யாகும். சுவாசமும் பிராணனும், '**காற்று**', உடலின் தணியாத வெப்பம் '**நெருப்பு**', திரவப்பகுதி '**நீர்**', திடப்பகுதி '**நிலம்**' ஆகின்றன.

சரீரம் ஐந்து பூதங்களாலும் ஆனது, '**பஞ்சாத்மகம்**' என்றது கர்ப்போபநிஷத்து.

அவைகள் யாவை?

**ப்ருத்வி** (நிலம்), **அப்பு** (நீர்), **தேயு** (நெருப்பு), **வாயு** (காற்று), **ஆகாசம்** (வெளி) ஆகியவையே பஞ்ச மூலங்கள் என்னும் பொருள்பட, நம்தேகத்தில் எது நிலம்? எது நீர், எது நெருப்பு, எது காற்று? எந்தப் பகுதி ஆகாயம்?

எதுகடினப் பகுதியோ? அது **ப்ருத்வி** எனப்படும் நிலம் சார்ந்த தாதுக்களால் ஆனது.

எது திரவப்பகுதியோ, அது **நீர்.**

எது தணியாத வெப்பமோ, அது **நெருப்பு.**

எது உள்ளும் வெளியும், போக்கும் வரத்துமாகச் சலிக்கின்றதோ, அது **காற்று.**

எது இடமளித்ததோ, அது **வெளி.**

நம் தேகத்தின் அங்கங்களாய், செயல்களாய், இயல்பு களாய் நாம் அறிந்த தத்துவங்களை, ஐந்து தத்துவங்கள் கொண்ட ஐந்து தொகுப்புகளாகத் தொகுத்து, அவற்றில் ஒவ்வொரு தத்துவத்திலும் ஆதாரமான பூதச்சேர்க்கைகளை விவரிக்கின்றது சிவப்பிரகாசக் கட்டளை.

இதுவரை நாம் அறிந்தனவற்றைக்கொண்டு இவைகள் யாவையும் நாம் விளங்கிக்கொள்ள முடியாது எனினும், இவற்றை தெரிந்து வைத்துக் கொள்வோம்.

வேறு புதிய விஷயங்களை அறியும்போது பொருத்திப் பார்க்கலாம்.

முதலில் பிருத்வி தத்துவம் அல்லது மண். மண்ணில் மண்ணாய் இருப்பது எலும்பாகின்றது.

மண்ணில் நீர் சேர்வது மாமிசமாகவும், மண்ணில் தீ சேர்வது தோலாகவும், மண்ணில் காற்று சேர்வது நரம்பு மண்டலமாகவும், மண்ணில் ஆகாயத்தின் சேர்க்கை முடியாகவும் விளைகின்றன.

எலும்பில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், மண்ணின் சூக்ஷ்ம தத்துவங்களும் மட்டுமே இருப்பதாகக் கொள்ளலாம்.

மாமிசத்தில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், நீரின் சூக்ஷ்ம குணங்களும் உள்ளன.

தோலில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், நெருப்பின் சூக்ஷ்ம குணங்களும் உள்ளன.

நரம்புமண்டலத்தில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், காற்றின் சூக்ஷ்ம குணங்களும் உள்ளன.

முடியில் மண்ணின் ஸ்தூல குணங்களும், ஆகாசத்தின் சூக்ஷும குணங்களும் உள்ளன என்று பொருள் கொள்ளலாம்.

அடுத்து ஜல (நீர்) தத்துவம். நீரில் நீரின் இருப்பு சிறுநீராகவும், நீரில் மண்ணின் சேர்க்கை உமிழ்நீராகவும், நீரில் தீ சேர்வது வியர்வையாகவும், நீரில் காற்றின் சேர்க்கை இரத்தமாகவும், நீரில் ஆகாசத்தின் சேர்க்கை சுக்கிலம் மற்றும் சுரோணிதம் ஆகிய விந்து, நாதமாகவும் விளைகின்றன.

நெருப்பில் நெருப்பாக இருப்பது தூக்கமாகவும், நெருப்பில் மண்ணின் சேர்க்கை பசியாகவும், நெருப்பில் நீரின் சேர்க்கை தாகமாகவும், நெருப்பில் காற்றின் சேர்க்கை அசதியாகவும், நெருப்பில் ஆகாயத்தின் சேர்க்கை உடலுற வாகவும் விளைகின்றன.

காற்றில் காற்றாக இருப்பது **ஓட்டம்** என்னும் தொழிலாகவும், காற்றில் மண் சேர்வது **படுத்தல்** என்னும் தொழிலாகவும், காற்றில் நீர் சேர்வது **நடத்தல்** என்னும் தொழிலாகவும், காற்றில் நெருப்பு சேர்வது **இருத்தல்** என்னும் தொழிலாகவும், காற்றில் ஆகாசம் சேர்வது **குதித்தல்** அல்லது தாண்டுதல் என்னும் தொழிலாகவும் விளைகின்றன.

ஆகாசத்தில் ஆகாசம் **மோகம்** (ஆசை) என்னும் குணமாகவும், ஆகாசத்தில் மண் **இராகம்** (விருப்பு) என்னும் குணமாகவும், ஆகாயத்தில் நீர் **துவேஷம்** (வெறுப்பு) என்னும் குணமாகவும் ஆகாசத்தில் நெருப்பு **பயம்** (அச்சம்) என்னும் குணமாகவும், ஆகாயத்தில்காற்று **நாணம்** (வெட்கம்) என்னும் குணமாகவும் விளைகின்றன.

பிருத்வி தாங்குவது. நீர் பிண்டமாக்குவது. நெருப்பு பிரகாசப்படுத்துவது. வாயு கூட்டத்தை இயக்குவது. ஆகாசம் அவகாசமளிப்பது.

சரீரம் முழுதும் பஞ்ச பூதங்களால் ஆனது என்றாலும், பஞ்ச பூதங்களின் குணவிருத்தியான விஷயங்கள் நமக்கு எளிதில் புலனாவதால், விஷயங்களை நமக்கு உள்வாங்கி அறிவிக்கும் புலன்களை, இந்திரியங்களைமீண்டும் தொகுத்தறிவோம்.

காது, ஸ்தூலம். சப்தம் நுண்மையானது. காது என்பது கருவி. கேட்டல் என்பது காரியம். கிரஹிக்கப்படும் சப்தம் என்பது அதனால் விளையும் அறிவு.

காது அல்லது செவி, ஆகாசத்தின் அம்சம்.

அது ஆகாசத்தின் அம்சமான விஷயங்களை கேட்டவாறே இருக்கின்றது. நாம் கேட்கும் சப்தங்கள் பத்து அங்கங்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

**ஷட்ஜம், ருஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம்** ஆகிய ஏழு ஒலிகளும், **இஷ்டம், அனிஷ்டம்** மற்றும் **பிரணிதானம்** ஆகிய மூன்று குணங்களும், சப்தத்தின் பத்து அங்கங்களாகின்றன.

அதேப்போல், தோல் என்பது பௌதிக உடல். தொடு உணர்வு, அது உணர்த்தும் அறிவு.

இங்கு தோல் கருவி. தொடல் என்பது காரியம். தொடு உணர்வு, தொடலால் விளையும் அறிவு.

தோல் காற்றின் அம்சம். அது ஸ்பரிசத்தால் உணரும் குளிர்ச்சி, வெப்பம், மிருதுத் தன்மை, கடினத் தன்மை ஆகிய விஷயங்களை உணர்ந்தவாறே இருக்கும்.

கண், ஸ்தூல உடலின் ஒரு உறுப்பு. பார்வை அதன் காரியம். காட்சி, ஞானம் அல்லது அறிவு.

கண் நெருப்பின் அம்சமாதலால், அது வெண்மை, கருமை, சிவப்பு, பச்சை, நீலம், மிச்ரம் (எல்லா நிறங்களும் கலந்த நிறம்) ஆகிய நிறங்களை உள்வாங்கும்.

நீளம், குட்டை, பருமன், மெலிவு போன்ற பரிமாணங் களையும் உள்வாங்கும். இந்த பத்து ரூபங்களும் கண்வழி நாம் அறியும் ஞானம்.

நாக்கு என்னும் உறுப்பு நீரின் அம்சமாக ரஸம் என்னும் ஞானத்தை உள்வாங்கித் தருகின்றது.

**உப்பு, புளிப்பு, கசப்பு, இனிப்பு, காரம்** மற்றும் **துவர்ப்பு** ஆகிய அறுசுவைகளையும் அது உள் வாங்கியவாறே இருக்கின்றது.

மூக்கு என்னும் உறுப்பு, நிலத்தின் அம்சமாக நறுமணம் மற்றும் துர்கந்தம் ஆகியனவற்றை முகரலால் உள் வாங்கியவாறே இருக்கின்றது.

இந்த கருவிகளுக்கு ஓரோர் ஆதார தேவதைகளை வேதாந்தம் வரிசைப்படுத்துகின்றது.

செவியாகிய காது, எல்லா திசைகளினின்றும் சப்தத்தை உள்வாங்குவதாலும், செவிப்புலனுக்கு ஆதாரமான ஆகாசம் திசைகளால் அறியப்படுதலாலும், செவிக்கு திசைகள் ஆதார தேவதைகளாக அறிவிக்கப்படுகின்றன.

தோலாகிய த்வக், காற்றின் குணமாகிய ஸ்பரிசத்தை உள்வாங்குவதால், காற்றை புருஷ வடிவில் உருவகப்படுத்தி, தோலுக்கு வாயு ஆதாரதேவதையாக அறிவிக்கப்படுகின்றது.

பஞ்சபூதங்களை நுண்மை அடிப்படையில் ஆகாச த்திற்கும், காற்றிற்கும் அடுத்து நெருப்பு என வரிசைப் படுத்தினோம்.

நெருப்பே பஞ்ச பூதங்களில் புலன்களுக்குத் தெரியும் வண்ணம் ரூபம் கொள்ளும் முதல் பூதம்.

சூரியன், கண்ணால் நம்மால் காணத்தக்க பிரம்மாண்டமான நெருப்பு பந்தாகின்றது. கண்ணிற்கு சூரியன் ஆதார தேவதையாக அறிவிக்கப்படுகின்றது.

நாக்குநீரின் அம்சமான ரஸத்தை உள்வாங்குவதால், நாக்குக்கு வருணன் ஆதார தேவதையாக அறிவிக்கப் படுகின்றது.

(வருணன் மழைக் கடவுளாக, நீருக்கு ஆதாரமாக அறியப்படுகின்றார்).

மூக்கு, நிலத்தின், தாதுக்களின் அம்சமான கந்தத்தை உள்வாங்குதலால், நாக்குக்கு அஸ்வினி தேவர்கள் ஆதார தேவதைகளாக அறிவிக்கப்பட்டனர்.

(தாதுக்களின் மருத்துவ குணம் அறிந்து, பிரயோகிக்கும் தேவலோக மருத்துவர்களே அச்வினிதேவர்கள்).

புலன்களால் உள்வாங்கி உணரப்படும் சுவை (ரஸம்), ஒளி (ரூபம்), ஊறு (ஸ்பரிசம்), ஓசை (சப்தம்) மற்றும் நாற்றம் (கந்தம்) ஆகிய ஐந்து இந்திரிய விருத்திகளை ஆராய்ந்து, அவற்றின் உண்மைப் பண்புகளை அறிந்து கொள்பவர்களே, உலகின் இயல்பு நிலை அறிந்தவராவார்.

இதுவரை நாம் கண்டனவற்றை, ஆழ்ந்து கவனித்தால் புலப்படும் உண்மை என்ன?

இந்திரியங்களின் ஆதாரமும் குணங்களே.

விஷயங்களின் ஆதாரமும் குணங்களே.

அதாவது, விஷயங்களின் குணங்களே இந்திரியங் களில் பிரவர்த்திக்கின்றன அல்லது விருத்தியாகின்றன.

இதையே *'குணங்கள், குணங்களில் பிரவர்த்திக் கின்றன'* என்ற பகவத்கீதை வாக்கியமாக, '**குணா குணேஷு வர்தந்தே**' என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகின்றார்.

காது என்ற கருவியில் உள்ள செவிப் பறையிலிருந்து நரம்புகளே அதிர்வுகளை மூளைக்கு எடுத்துச் செல்கின்றன?

சருமத்தின் உணர்வுகள், நரம்புகள் வழியே மூளைக்கு உணர்த்தப்படுகின்றனவே?

கண்ணின் விழித்திரையிலிருந்தும், நாவின் சுவை அரும்புகளினின்றும், மூக்கின் நுகர்ச்சி முனைகளினின்றும் நரம்புகளே விஷயங்களை மூளைக்குக் கடத்தி அறிவிக் கின்றன?

இந்திரியங்களாய் நாம் இதுவரை கண்டன யாவும், கருவிகள் மட்டுமன்று. அந்தக் கருவிகளின் விஷயமறிந்து உரைக்கும் முழுத்திறனுமேயாம்.

காது, செவிப்பறை, நரம்பு மண்டலங்கள் மற்றும் மூளையின் (சப்தம் அறியும், சப்தத்தை பகுக்கும், சப்தங்களை விளங்கிக்கொள்ளும்) அம்சங்களையும் சேர்த்தே நாம் காது என்னும் இந்திரியமாகக் குறிப்பிடுகின்றோம்.

மற்ற இந்திரியங்களுக்கும் அவ்வாறே.

விஷயங்களை உள்வாங்கும் திறன் சார்ந்து உலகில் உள்ள உயிரினங்களை நாம் ஓரறிவு, ஈரறிவு அடங்கிய உயிர்களாய் பகுக்கின்றோம்.

ஸ்பரிசிக்கும் திறன் மட்டுமே உள்ள தாவரங்கள் ஓரறிவு உயிர்களாகவும், ஸ்பரிசம் மற்றும் சுவை ஆகிய திறன்கள் மட்டுமே உள்ள புழு, மீன், சங்கு போன்றவை ஈரறிவு கொண்ட உயிர்களாகவும் அறியப்படுகின்றன.

ஸ்பரிசம், சுவை, கந்தம் ஆகிய மூன்று திறன்கள் கொண்ட எறும்பு, கரையான் போன்றவை மூன்றறிவு உயிர்களாகவும், இத்திறன்களுடன் கண்டறியும் திறனும் கொண்ட பாம்பு, வண்டு வகைகள் நான்கறிவு உயிர்களாகவும் அறியப்படுகின்றன.

ஏனைய பறவை, மிருக இனங்களுக்கு, ஐந்து திறன்களும் உள்ளன. அவை ஐந்தறிவு உயிர்களாய் அறியப்படுகின்றன.

ஆறறிவு உயிர்களாக அழைக்கப்படும் நமக்கு, இவை தவிர்த்து, ஆறாவது அறிவாக ஏதேனும் இருக்கின்றதா?

ஆம்! இருக்கின்றது.

அதுவே, **“மனம்”** எனப்படுகின்றது.

சூட்சுமமான (கண்ணிற்குத்தெரியாத) மண், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் என்ற ஐந்து பூதங்களிலிருந்து, ஸ்தூல (கண்ணிற்கு தெரிகின்ற) *மண், நீர், நெருப்பு, காற்று* மற்றும் *ஆகாயம்* என்ற ஐந்து பூதங்களும் உண்டாகி, அந்த ஐந்து பூதங்களின், ஒவ்வொரு பூதத்திலிருந்து இரண்டு பூதங்களாகப் பிரிந்து, அவைகளில் பிரிந்த இரண்டு விதமான பஞ்ச பூதங்களில், முதல் ஐந்து பூதங்களும் சேர்ந்து ஒன்றாகவும் (சமஸ்டியாகவும்), மற்ற ஐந்தும் தனித்தனியாக (வியஸ்டியாகவும்) ஐந்து பூதங்களும் உண்டாயின என அறிந்தோம்.

இதில், ஐந்து பூதங்களும் ஒன்றேயான சமஸ்டி பஞ்ச பூதங்கள் **"பிரபஞ்சம்"** ஆயிற்று.

இரண்டாவதகாக பிரிந்த ஐந்து பூதங்களும் தனித்தனியாக அப்படியே வியஸ்டியாக உள்ள அந்த பஞ்ச பூதங்கள் **"இருபத்தைந்து தத்துவங்களாக"** உண்டாயிற்று.

அது எப்படியென்றால்,

இதுபோல, பஞ்சபூதங்களையும் சமஸ்டி, வியஸ்டி பாகங்களாகச் செய்து ஒரு பூதத்துடன் மற்றொரு பூதம் சேர்ந்தபோது இருபத்தைந்து தத்துவங்களாக ஜீவர்களுக்கு சரீர *ரூபத்தை (உடல்கள்)* கொடுக்கின்றது.

## சூக்குமசரீரம் - தத்துவங்கள் 20:

### 1) பஞ்ச வாயுக்கள் – 5

1) பிராணன்
2) அபானன்
3) வியானன்
4) உதானன்
5) சமானன் என வாயுத் தத்துவங்கள் மொத்தம் (5)

## 2) கர்மேந்திரியங்கள் – 5

1) வாக்கு
2) பாணி
3) பாதம்
4) கருவாய்
5) எருவாய் என கர்மேந்திரியங்கள் மொத்தம் (5)

## 3) ஞானேந்திரியங்கள் – 5

சுரோத்திரம் எனும் கேட்கும் கருவி(காது)
ஷட்சு எனும் பார்க்கும் கருவி (கண்)
ஆக்கிராணம் எனும் நுகரும் கருவி (மூக்கு)
சிங்ஙுவை எனும் சுவைக்கும் கருவி (நாக்கு)
ஸ்பரிசம் எனும் தொடு உணர்வுக் கருவி(தோல்) என
ஞானேந்திரியங்கள் மொத்தம் (5)

(கண், காது என்பவை ஸ்தூலத்திலும், அதன் செயல்படு தன்மையான கருவிகள் சூக்கும சரீரத்தில் என அறிக)

## 4) அந்தகரணங்கள் – 5

1) மனம்
2) புத்தி
3) சித்தம்
4) அகங்காரம்
5) உள்ளம் என அந்தகரணத் தத்துவங்கள்

ஆக, கண்களுக்குப் புலப்படாத சூக்கும சரீரம் என்பது, (5 வாயுக்கள் + 5 கர்மேந்திரியங்கள் + 5 ஞானேந்திரியங்கள் + 5 அந்தகரணங்கள்) **20** தத்துவங்கள் ஆகும்.

இவைகள் அத்தனையும் **சமஸ்டி – வியஸ்டி** என்று பிர்க்கப்பட்டு, சரி பாதியாகப் பிரிக்கப்பட்ட சமஸ்டி தத்துவமும், தனித்தனியாகப் பிரிந்த வியஸ்டி தத்துவமும் ஒன்றாகச் சேர்ந்து, மொத்தம் 25 தத்துவங்கள் உள்ளன என்பதை அறியவும்.

அதாவது, **சமஸ்டி** என்றால், ஒன்று சேர்ந்தவைகள் என்றும், **வியஸ்டி** என்றால், தனித்து இருப்பது என்றும் பொருள்.

உதாரணமாக எப்படி இதைப் புரிந்துக் கொள்ளலாம் என்றால், ஒரு தனித்த மரம் **வியஸ்டி** என்றும், பல மரங்கள் ஒன்று சேர்ந்த தோப்பு **சமஸ்டி** என்றும் கருதலாம்.

அந்த வகையிலே, முதலில் ஆகாசம் என்ற ஒரே ஒரு பூதத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, அதை இரண்டு பாகமாகப் பிரித்து, அதில், ஒரு பாகத்தை சமஸ்டி என்று சொல்லப்படும் மற்ற நான்கு பூதங்களுடன் சேர்த்து ஒன்றாக வைத்துக் கொள்ளப்பட்டது.

மற்றொரு பாகத்தை வியஸ்டி என்று சொல்லப்படும் தனித்தனி பஞ்ச பூதங்களாக வைத்துக் கொள்ளப்பட்டது.

அதில் முதல் பாதி பாகமான சமஸ்டி ஆகாசம் **'ஞாதா'** என்று சொல்லப்படுகின்றது. ஞாதா என்பது ஈஸ்வரனும், ஈஸ்வரனின் பிரதி பிம்பமும் கூடியதே ஆகும்.

அடுத்து, இரண்டாவது பாதி பாகமான வியஸ்டி ஆகாசத்தை நான்கு பாகமாகச் செய்து, அதில் முதல் பாகமான வியஸ்டி ஆகாசத்தை வாயுவுடன் சேர்த்த பொழுது, **"மனம்"** என்னும் தத்துவம் உண்டாயிற்று.

இரண்டாவது பாகமான வியஸ்டி ஆகாசத்தை அக்கினியுடன் சேர்த்த பொழுது, **"புத்தி"** என்னும் தத்துவம் உண்டாயிற்று.

மூன்றாவது பாகமான வியஸ்டி ஆகாசத்தை நீருடன் சேர்த்த பொழுது, **"சித்தம்"** என்னும் தத்துவம் உண்டாயிற்று.

நான்காவது பாகமான வியஸ்டி ஆகாசத்தை மண்ணுடன் சேர்த்த பொழுது, **"அஹங்காரம்"** என்னும் தத்துவம் உண்டாயிற்று.

இந்த *மனம், புத்தி, சித்தம்* மற்றும் *அஹங்காரம்* என்னும் நான்கையுமே **"அந்தக்கரணம்"** என்று சொல்லப்படும்.

இதுப்போல, வாயுவை இரண்டு பாகங்களாக பிரித்து, அதில் முதல் பாகம் **சமஸ்டி** என்று சொல்லப்படும்.

இரண்டாவது பாகம் **வியஸ்டி** என்று சொல்லப்படும்.

இதில் முதல் பாதி பாகம் சமஸ்டி வாயு **"வியானன்"** என்ற வாயுவாயிற்று.

இரண்டாவது பாதி பாகமான வியஸ்டி வாயுவை நான்கு பாகமாகச் செய்து, அதில் முதல் பாகமான வியஸ்டி வாயுவை, ஆகாசத்துடன் சேர்த்த பொழுது, **“சமானம்”** என்னும் வாயு உண்டாயிற்று.

இரண்டாவது பாகமான வியஸ்டி வாயுவை அக்கினியுடன் சேர்த்த பொழுது, **“உதானன்”** என்னும் வாயு உண்டாயிற்று.

மூன்றாவது பாகமான வியஸ்டி வாயுவை நீருடன் சேர்த்த பொழுது, **“பிராணன்”** என்னும் வாயு உண்டாயிற்று.

நான்காவது பாகமான வியஸ்டி வாயுவை மண்ணுடன் சேர்த்த பொழுது, **“அபானன்”** என்னும் வாயு உண்டாயிற்று.

இந்த *வியானன், சமானன், உதானன், பிராணன்* மற்றும் *அபானன்* என்று ஐந்து வாயுக்களும் எல்லா ஜீவராசிகளுக்கும் **ஐந்து பிராணன்களாக** உள்ளன.

இதுப்போல, அக்னியை இரண்டு பாகங்களாக பிரித்து, அதில் முதல் பாகம் சமஸ்டி என்று சொல்லப்படும். இரண்டாவது பாகம் வியஸ்டி என்று சொல்லப்படும்.

இதில் முதல் பாதி பாகம் சமஸ்டி அக்னி, **“கண்கள்”** ஆயிற்று.

இரண்டாவது பாதி பாகமான வியஸ்டி அக்னியை நான்கு பாகமாகச் செய்து, அதில் முதல் பாகமான வியஸ்டி அக்னியை, ஆகாசத்துடன் சேர்த்த பொழுது, **“காதுகள்”** உண்டாயிற்று.

இரண்டாவது பாகமான வியஸ்டி அக்கினியை வாயுவுடன் சேர்த்த பொழுது, **“சரீரம்”** (உடல்) உண்டாயிற்று.

மூன்றாவது பாகமான வியஸ்டி அக்னியை நீருடன் சேர்த்த பொழுது, **“நாக்கு”** உண்டாயிற்று.

நான்காவது பாகமான வியஸ்டி அக்னியை மண்ணுடன் சேர்த்த பொழுது, **“மூக்கு”** உண்டாயிற்று.

இவ்வாறு அக்கினியை சமஸ்டி, வியஸ்டியாகச் செய்து, அதில் உண்டாகிய *கண்கள், காதுகள், சரீரம், நாக்கு*, மற்றும் *மூக்கு* என்ற இந்த ஐந்து இந்திரியங்களையும் **“ஞானேந்திரியங்கள்”** எனப்படும்.

இதுப்போல, நீரை இரண்டு பாகங்களாக பிரித்து, அதில் முதல் பாகம் **சமஸ்டி** என்று சொல்லப்படும்.

இரண்டாவது பாகம் **வியஸ்டி** என்று சொல்லப்படும்.

இதில் முதல் பாதி பாகம் சமஸ்டி நீர் ரச தன்மாத்திரை ஆயிற்று.

அதாவது **“ருசி”** அறிவதாயிற்று.

இரண்டாவது பாதி பாகமான வியஸ்டி நீரை நான்கு பாகமாகச் செய்து, அதில் முதல் பாகமான வியஸ்டி நீரை, ஆகாசத்துடன் சேர்த்த பொழுது, **“ஸப்தம்”** ஒலி) உண்டாயிற்று.

இரண்டாவது பாகமான வியஸ்டி நீரை, வாயுவுடன் சேர்த்த பொழுது, **“ஸ்பரிசம்”** (தொடு உணர்ச்சி) உண்டாயிற்று.

மூன்றாவது பாகமான நீரை அக்னியுடன் சேர்த்த பொழுது, **“ரூபம்”** (பார்வை) உண்டாயிற்று.

நான்காவது பாகமான நீரை, மண்ணுடன் சேர்த்த பொழுது, **“கந்தம்”** (வாசனை) உண்டாயிற்று.

இவ்வாறு, *ஸப்த, ஸபரிச, ரச, ரூப, கந்த*மென்னும் ஐந்தும் **“பஞ்ச தன்மாத்திரை”** களென்று சொல்லப்படும்.

இதுப்போல, மண்ணை (பிருத்வி) இரண்டு பாகங்களாக பிரித்து, அதில் முதல் பாகம் சமஸ்டி என்று சொல்லப்படும். இரண்டாவது பாகம் வியஸ்டி என்று சொல்லப்படும்.

இதில் முதல் பாதி பாகம் சமஸ்டி மண் மலத்தை வெளித்தள்ளும் **“குதம்”** (ஆசனவாய்) ஆயிற்று.

இரண்டாவது பாதி பாகமான வியஸ்டி மண்ணை நான்கு பாகமாகச் செய்து, அதில் முதல் பாகமான வியஸ்டி மண்ணை, ஆகாசத்துடன் சேர்த்த பொழுது, **“வாக்கு”** உண்டாயிற்று. அதாவது, பேசுவதற்கு **வாய்** உண்டாயிற்று.

இரண்டாவது பாகமான வியஸ்டி மண்ணை வாயுவுடன் சேர்த்த பொழுது, **“பாணி”** (கை) உண்டாயிற்று.

மூன்றாவது பாகமான வியஸ்டி மண்ணை அக்னியுன் சேர்த்த பொழுது, நடக்கவும், நிற்கவும் கூடிய **“பாதங்கள்”** உண்டாயிற்று.

நான்காவது பாகமான வியஸ்டி மண்ணை நீருடன் சேர்த்த பொழுது, **“குய்யம்”** (மர்மஸ்தானம்) உண்டாயிற்று .அதாவது, ஆண், பெண்களுக்கு கண நேர சந்தோசத்தைக் கொடுக்கும் **மர்மஸ்தானம்** உண்டாயிற்று.

மேற்சொல்லிய *வாக்கு, பாணி, பாதம், குய்யம்* மற்றும் *குதம்* என்ற இவ்வைந்தும் **“கர்மேந்திரியங்கள்”** என்று அழைக்கப்படுகின்றன.

இதில், பஞ்ச பூதங்களைப் பாதிக்காமல் அகண்டமாக இருந்த முதல் பாதி பாகமான சமஸ்டி பாகமானது *ஞாதா, வியானவாயு, கண்கள், ரசம்* (ருசி), மற்றும் *குதம்* என்னும் ஐந்து தத்துவங்களாகப் பிறந்தன.

இரண்டாவது பாகமான வியஸ்டி பாகங்கள் ஒவ்வொன் றையும், நான்கு பாகங்களாகப் பிரித்து, அந்தந்த பூதங்களில் சேர்த்த பொழுது **இருபது தத்துவங்கள்** ஆயின.

இங்கு இந்த இருபது தத்துவங்களும், மேற்சொன்ன சமஸ்டி ஐந்து தத்துவங்களும் சேர்ந்து இருபத்தைந்து தத்துவங்களாக இந்த **“சரீரம்”** பிறந்தது.


மாயையால் உண்டாகிய பிரபஞ்சமும், இந்த மாயா (உண்மையற்ற) சரீரமும் நசிக்கும் பொழுது, அதனுடன் கூடவே, இந்த மாயா பிரபஞ்சமும் நசிந்து விடுகின்றது.

மறுபடியும் இந்த மாயா சரீரம் பிறக்கும் பொழுது, அதனுடன் கூடவே, இந்த **மாயா பிரபஞ்சமும்** ஏற்றி வைத்துக் கொண்ட ஏராள்மான எண்ணங்களின் வாயிலாக உண்டான நாம், ரூபங்கள் மூலம் மனதினால் பிறக்கின்றது.


இவ்வாறு, இந்த மாயா சரீரம் பலதடவை பிறந்து, பிறந்து நசிப்பதனால் இந்த மாயா பிரபஞ்சமும் பல தடவைகள் நம்முடன் கூடவே பிறந்து, பிறந்து மறைவுபடுகின்றது.

**ஓம் தத் சத்!**

## பஞ்சீகரணம்




## பஞ்சீகரணமும் படைப்பும்



# பஞ்சீகரணம்



ப்ரக்ஞன்